# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 24 வியாழன் 09.09.2021 மலர் - 2, இதழ் - 156


## ஸ்டாலினுக்கு தெரியுமா மதநல்லிணக்கம்

மத்திய அரசின் அனைத்து திட்டங்களையும் எதையும் ஆராயாமல் எதிர்ப்பது ஒன்றையே குறிகோளாக கொண்டு செயல்பட்டு வருகிறது தி.மு.க என்பதற்கு சமீபகால உதாரணமாக வேளாண் சட்டங்களின் உண்மைத் தன்மையை மறைத்து அது விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக கூறி, அதற்கு எதிராக தமிழக சட்டசபையில் தீர்மானத்தை தி.மு.க தலைமையிலான அரசு நிறைவேற்றியது. அதேபோல் நேற்று, சி.ஏ.ஏ எனப்படும் இந்திய குடியுரிமை சட்டம் மத நல்லிணக்கத்திற்கு உகந்ததாக இல்லை என்று கூறி அதனை ரத்து செய்யும் தீர்மானத்தை முதலமைச்சர் ஸ்டாலின் முன்மொழிந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ஜ.க உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க உறுப்பினர் நயினார் நாகேந்திரன், 'பாரதத்தில் எந்தவொரு முஸ்லிம்களுக்கும் பாதிப்பு இல்லை. இச்சட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக எந்தவொரு கருத்தும் இல்லை. மத்திய அரசு, நாட்டின் நலன், பாதுகாப்பு கருதியே பாடுபட்டு கொண்டிருக்கிறது. விநாயகர் சதுர்த்தி, தீபாவளி போன்ற ஹிந்து மதப் பண்டிகைக்குத் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் வாழ்த்து தெரிவிக்கின்றனர். ஆனால், ஸ்டாலின் மட்டும் வாழ்த்து சொல்வதில்லை, ஆனால் அவர்தான் இன்று மத நல்லிணக்கம் பற்றிப் பேசுகிறார்!!!' என தெரிவித்தார்.



விஜயபாரதம்


## விநாயகர் சதுர்த்தி கைவிரித்த நீதிமன்றம்

சென்னையை சேர்ந்த இல.கணபதி என்பவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தமிழக அரசு, பொது இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபடவும், ஊர்வலம் செல்லவும் விதித்த தடையை ரத்து செய்ய வேண்டும், பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபட, ஊர்வலமாக எடுத்து சென்று கரைக்க அனுமதி அளிக்க கோரி இருந்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் அமர்வு, மதஉரிமைகளை பின்பற்ற வாழ்வாதார உரிமை முக்கியமானது. பொதுநலன் கருதியே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது, அரசு பிறப்பித்துள்ள உத்தரவில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று கூறி வழக்கை முடித்து வைத்தது.



விஜயபாரதம்

# விநாயகர் சிலை உடைப்பு



விஜயபாரதம்

உலகம் முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா 10ம் தேதி கொண்டாடப்படுகிறது. கொரோனாவை காரணம் காட்டி தி.மு.க அரசு தடை விதித்துள்ளது. இந்நிலையில், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் வடசேரி ஜங்ஷனில், ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த ஒரு குடும்பத்தினர், சாலையோரத்தில் வீடுகளில் வைத்து வழிபடும் விநாயகர் சிலைகள் செய்து விற்பனைக்காக வைத்துள்ளனர். அங்கு கடந்த செவ்வாய் இரவு சில மர்ம நபர்கள் அங்கு வந்து சிலைகளை அங்கு வைத்து விற்க பணம் கேட்டு தகராறு செய்தனர். பணம் கொடுக்காததால் இரும்பு கம்பிகளால் அவர்களை தாக்கியதோடு, விற்பனைக்காக வைக்கப்பட்டு இருந்த விநாயகர் சிலைகளை உடைத்துவிட்டு சென்றனர். இதனை அறிந்த பா.ஜ.கவினர், இந்து முன்னணியினர், பல்வேறு ஹிந்து அமைப்பினர் அங்கு திரண்டனர். மர்ம நபர்களை உடனே கைது செய்ய வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இச்சம்பவம் மாமூல் தகறாரா அல்லது மதக்கலவரம் தூண்டும் முயற்சியா, விநாயகர் சதுர்த்தியை தடுக்க அரசியல் கட்சிகள்

# பாரதிய கிசான் சங்கம் ஆர்ப்பாட்டம்




விஜயபாரதம்

அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் லாபகரமான விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும். இதற்கு எம்.எஸ்.பி தீர்வு அல்ல, எனினும் எம்.எஸ்.பி சட்டபூர்வ உரிமையாக்கப்பட வேண்டும். உற்பத்தி செலவின் அடிப்படையில் எம். எஸ்.பி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். கொள்முதல் நிலையங்களை திறம்பட செயல்படுத்த வேண்டும். வேளாண் இடு பொருட்களுக்கு மானிய விலை, அனைத்து வேளாண் பொருட்களுக்கும் பயிர் காப்பீடு, கிசான் ரயில் கன்னியாகுமரி வரை நீட்டிப்பு, தேங்காய் வாழையை எம்.எஸ்.பியில் சேர்ப்பது, அனைத்து விவசாயிகளுக்கும் உழவர் அட்டை, கிசான் கிரெடிட் கார்டு, விவசாயிகளுக்கு கால்நடைகள் மானிய விலையில் வழங்குதல், விவசாயிகளுக்கு பென்ஷன் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி செப்டம்பர் 8'ல் பாரதிய கிசான் சங்கம் அகிலபாரத அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இக்கோரிக்கைகளை வலியுறுத்தி பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம், மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# அவசரகால தரையிறக்கப் பயிற்சி



விஜயபாரதம்

இன்று காலை 9 மணி அளவில் ராஜஸ்தானின் பார்மரில் உள்ள தேசிய நெடுஞ்சாலை NH 924A வில் இந்திய ராணுவ விமானங்கள் ஒரு அவசர தரையிறக்கப் பயிற்சியை மேற்கொள்ள உள்ளன. இதில் முதல் முறையாக பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோர் இந்த விமானப்படையின் விமானங்களில் பயணிக்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பாரத போர் விமானங்கள் மற்றும் பிற விமானங்களின் அவசர தரையிறக்கங்களைக் கையாளத் தயாராக 3.5 கி.மீ நீளமுள்ள ஏர் ஸ்ட்ரிப், நான்கு விமானங்களுக்கான பார்க்கிங், ஒரு ஏர் டிராஃபிக் கண்ட்ரோல் டவர் உள்ளிட்டவை அமைக்கப்பட்டு உள்ளன. இந்த இடம் பாரத பாகிஸ்தான் எல்லையில் இருந்து 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ளதால் இந்த அவசர தரையிறங்கும் பகுதி தேசிய பாதுகாப்பு கண்ணோட்டத்தில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. முன்னதாக, உத்தரப்பிரதேச மாநிலத்தில் அவசர தரையிறங்கும் ஏர் ஸ்ட்ரிப் பொருத்தப்பட்ட இரண்டு விரைவுச் சாலைகளை மத்திய அரசு ஏற்கனவே நிர்மாணித்துள்ளது. தேசமெங்கும் தமிழகம், ஆந்திரா, ஒடிசா, ஜார்கண்ட், உள்ளிட்ட இடங்களில் தேசிய நெடுஞ்சாலைகளில் இதுபோல 29 தடங்களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

# பா.ஜ.க. எம்.பி. வீட்டருகே குண்டு வெடிப்பு



விஜயபாரதம்

மேற்கு வங்க மாநிலம் பாரக்பூர் தொகுதியின் எம்.பி அர்ஜூன் சிங் பா.ஜ.கவை சேர்ந்தவர். கோல்கட்டாவில் இருந்து 100 கி.மீ., தொலைவில் உள்ள ஜகதால் பகுதியில் உள்ளது. நேற்று காலை 6:30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்த சில மர்ம நபர்கள், அர்ஜூன் சிங் வீட்டின் அருகில் 3 வெடிகுண்டுகளை வீசிவிட்டு தப்பி சென்றனர். இதில் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. கதவு ஜன்னல்கள் லேசாக சேதம் அடைந்தன. இச்சம்பவம் தொடர்பாக தகவல் வந்ததால் டெல்லியில் இருந்து உடனடியாக சொந்த ஊர் திரும்பினார் அர்ஜூன் சிங். இது தொடர்பாக கருத்து தெரிவித்த அம்மாநில கவர்னர் ஜக்தீப் தங்கார், 'மேற்கு வங்கத்தில் வேண்டுமென்றே நடத்தப்படும் இதுபோன்ற வன்முறை சம்பவங்கள் குறைவதற்கான அறிகுறிகள் ஏதும் தெரியவில்லை.இந்த வெடிகுண்டு வீசப்பட்ட சம்பவம், சட்டம் ஒழுங்கு நிலை குறித்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. காவலர்கள் விரைவாக நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்' என்றார். திரிணமுல் காங்கிரஸ் கட்சியினர்தான் இந்த சம்பவத்திற்கு என பா.ஜ.க மாநிலத் தலைவர் திலீப் கோஷ் குற்றம் சாட்டினார்.

# கோயில் நில உரிமையாளர் கடவுள்



விஜயபாரதம்

கோயில் நிலங்களை பூசாரியோ, அர்ச்சகரோ விற்பதை தடுக்க மத்திய பிரதேச அரசு நில வருவாய் சட்டத்தின் கீழ், கோயிலுக்கு சொந்தமான நிலத்தின் உரிமையாளர்களாக அர்ச்சகர், பூசாரிகளின் பெயர்களை நீக்க உத்தரவிட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட மனுவை விசாரித்த மத்திய பிரதேச உயர் நீதிமன்றம், அரசின் உத்தரவை ரத்து செய்தது. அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய பிரதேச அரசு மேல்முறையீடு செய்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், 'கோயில் நிலத்தின் உரிமையாளர், அந்த கோயிலில் உள்ள கடவுள் தான். அர்ச்சகரோ, பூசாரியோ அல்ல. அதனால் கோயில் நில பத்திரத்தில் உரிமையாளர் என்ற இடத்தில் அக்கோயிலில் உள்ள தெய்வத்தின் பெயர்தான் இடம் பெற வேண்டும்' என உத்தரவிட்டனர்.

# விநாயகர் சதுர்த்திக்கு பவர் ஸ்டார் ஆதரவு



விஜயபாரதம்

பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாட ஆந்திர அரசு தடை விதித்துள்ளது. ஆந்திர அரசின் இந்த முடிவுக்கு பா.ஜ.க, ஹிந்து அமைப்புகள், பல்வேறு கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்நிலையில், ஜனசேனா கட்சி தலைவரும் நடிகருமான பவன் கல்யாண் வெளியிட்டுள்ள வீடியோவில், 'ஹிந்துக்கள் ஒவ்வொரு ஆண்டும் முதலில் கொண்டாடும் பண்டிகை விநாயகர் சதுர்த்தி. விநாயகர் சதுர்த்தியை கொண்டாடிய பின்னர் மட்டுமே மற்ற பண்டிகைகளை கொண்டாடுவது ஹிந்துக்களின் வழக்கம். ஆளும் ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டியின் பிறந்தநாள், அவருடைய தந்தை ராஜசேகர் ரெட்டியின் நினைவுநாள் ஆகியவற்றின் போது பல்லாயிரக்கணக்கான கட்சி தொண்டர்கள் கூடி நிகழ்ச்சிகளை நடத்தினர். ஆனால், அப்போது பரவாத கொரோனா, விநாயகர் சதுர்த்தி நடத்தினால் மட்டும் பரவுமா, விநாயகர் சதுர்த்தி தடை விதித்து அரசு எடுத்துள்ள முடிவு இவர்களுக்கு ஆலோசனை கூறுவது யார்? என்ற சந்தேகம் ஏற்பட்டு உள்ளது' என தெரிவித்துள்ளார்.



விஜயபாரதம்

# ஜார்கண்ட் அரசின் சார்பு அரசியல்

ஜார்க்கண்டில் காங்கிரஸ் ஆதரவுடன் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜே.எம்.எம்) கட்சி ஆட்சி செய்து வருகிறது. அங்கு சட்டப்பேரவையின் மழைக்காலக் கூட்டத்தொடர் நடந்து வருகிறது. அப்போது, சில கட்சிகளின் எம்எல்ஏ.க்கள் வெள்ளிக்கிழமை சிறப்பு தொழுகைக்காக இடம் ஒதுக்கும்படி சபாநாயகரிடம் கோரினர். சபாநாயகரும் அவர்களின் கோரிக்கையை ஏற்று சட்டப்பேரவையில் ஒரு அறையை ஒதுக்கினார். இதற்கு பா.ஜ.க எம்எல்ஏக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தங்களுக்கும் 'ஹனுமன் சாலிசா' பாட வசதியாக வளாகத்தில் இடம் ஒதுக்கக் கோரினர். தற்போது, ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் தொழுகை நடத்த இடம் ஒதுக்கப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடர்ந்துள்ளார் பைரவ் சிங் என்பவர். ஜார்கண்டின் முன்னாள் முதல்வரும் பா.ஜ.க மூத்த தலைவருமான பாபுலால் மராண்டி,''சட்டப்பேரவை என்பது ஜனநாயகத்தின் கோயில் போன்றது. இதை ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்காக மாற்றிவிடக் கூடாது. இதன்மூலம், ஜார்க்கண்ட் சட்டப்பேரவை ஒரு தவறான கலாச்சாரத்துக்கு வழிவகுக்கிறது. எனவே, இந்த உத்தரவை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். இல்லையெனில், பா.ஜ.க சார்பில்போராட்டம் நடத்தப்படும்'' என்று தெரிவித்தார்.

# ஐ.நாவில் பாரதம் குற்றச்சாட்டு



விஜயபாரதம்

ஐக்கிய நாடுகள் பொது சபையில் பேசிய ஐ.நாவி;ல் பாரதத்திற்கான நிரந்தர தூதர் விதிஷா மைத்ரா, ' பாரதத்தின் உள்நாட்டிலும் எல்லை பகுதிகளிலும் வன்முறை கலாசாரத்தை தூண்டுகிறது பாகிஸ்தான். அதே நேரத்தில் பாரதத்திற்கு எதிராக வெறுப்பை பரப்ப ஐ.நா சபையை தவறாக பயன்படுத்த முயற்சி செய்கிறது. அதனை அனைவரும் அறிவோம். பாகிஸ்தானின் இத்தகைய முயற்சிகளை நாங்கள் ஒருபோதும் ஏற்கவில்லை. அதனை கண்டிக்கிறோம். சகிப்புத்தன்மையின்மை மற்றும் வன்முறையின் வெளிப்பாடாக பயங்கரவாதம் உள்ளது. இவை, மதங்கள், கலாசாரத்திற்கு எதிரானவை. மதத்தை பயன்படுத்தி இச்செயல்களுக்கு நியாயம் கற்பிக்கும் பயங்கரவாதிகளை குறித்தும், அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் குறித்தும் உலகம் கவலைப்பட வேண்டும்' என்றார்.

# சிஷக் பர்வ் கல்வி முறை





விஜயபாரதம்

ஒரு தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. அவ்வகையில் நமது பாரதத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்காக மத்திய கல்வித் துறையின் புதிய முயற்சியான 'சிஷக் பர்வ்' திட்டத்தின் கீழ், பல புதிய முன்முயற்சி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். சிஷக் பர்வ் கொண்டாட்டம் செப்டம்பர் 5 முதல் 17ம் தேதி வரை நடைபெறுகிறது. 'தரமான மற்றும் நிலையான பள்ளிகள்: இந்திய பள்ளிகளிலிருந்து கற்றல்' என்பது சிஷக் பர்வின் 2021 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்.

இந்நிகழ்ச்சியில் வீடியோ கான்பரன்சிங் மூலம் உரையாற்றிய பிரதமர் மோடி, மத்திய அரசின் இந்த நடவடிக்கைகள் நமது கல்வி முறையை உலகளாவிய போட்டிகளுக்கு ஏற்ப நமது இளைஞர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் என்று கூறினார். மேலும், பாரத சைகை மொழி அகராதி, பேசும் புத்தகங்கள் (பார்வையற்றோருக்கான ஆடியோ புத்தகங்கள்), சி.பி.எஸ்.சி'க்கான பள்ளி தர உத்தரவாதம் மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பு, 'நிபான் பாரத்'திற்கான நிஷ்தா ஆசிரியர் பயிற்சித் திட்டம், கல்வித் தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள், சி.எஸ்.ஆர் பங்களிப்பாளர்கள் பள்ளி மேம்பாட்டிற்கு உதவுவதற்கான வித்யாஞ்சலி இணையதளம் உள்ளிட்டவற்றை துவங்கிவைத்தார்.

# ஆயுஷ் மருந்தகங்கள்




விஜயபாரதம்

அசாம் மாநிலம், கவுகாத்தியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்பானந்த் சோனோவால், 'ஆயுஷ் அமைச்சகத்தால் நாட்டில் மொத்தம் 12,500 சுகாதார ஆரோக்கிய மையங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. ஆயுஷ் துறையில் வடகிழக்கு மாநிலத்தின் திறனைப் பயன்படுத்த போதுமான முக்கியத்துவம் அளிக்கப்படும். 70 கோடி ரூபாய் செலவில் ஆயுர்வேதக் கல்லூரி அமைக்கப்படும். கவுஹாத்தியில் ஏற்கனவே உள்ள அரசு ஆயுர்வேதக் கல்லூரி சிறப்பு மையமாக உருவாக்கப்படும். மணிப்பூரில் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் கீழ் ஒரு பிராந்திய மூல மருந்துகள் களஞ்சியத்தை (RRDR) அமைப்பதற்கான வாய்ப்பை ஆராய்ந்து வருகிறோம். தேசிய மருத்துவ தாவரங்கள் வாரியம் (என்.எம்.பி.பி) வடகிழக்குப் பகுதியில் அமைக்கப்படும்' என தெரிவித்தார்.




விஜயபாரதம்

# வீட்டு வசதி திட்டம்

பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா) திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் 1.13 கோடிக்கும் அதிகமான வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 85 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ஏற்கனவே 50 லட்சத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் வீடுகளில் குடியேறியுள்ளனர். அவ்வகையில், வடகிழக்கு மாநிலங்களில் இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அசாம் மாநிலம் இதுவரை அனுமதிக்கப்பட்ட தனது பங்கில் 23 சதவீதத்தை நிறைவு செய்துள்ளது. திரிபுரா 50 சதவிகிதத்தை நிறைவு செய்து வடகிழக்குப் பகுதியில் முதலிடத்தில் உள்ளது. இது தவிர, டெல்லியில் உள்ள அங்கீகாரமற்ற காலனி பகுதிகளில் வசிக்கும் 3.5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள், பிரதம மந்திரி டெல்லி ஆவாஸ் அதிகாரர் யோஜனா (PMUDAY) திட்டத்தின் கீழ் காலனி பகுதிகளில் வீடு கட்ட நில உரிமைகளைப் பெறுவதற்காக டெல்லி மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர்.

# இத்தாலியர் கைது



விஜயபாரதம்

நேபாளத்தில் இருந்து சட்டவிரோதமாக எந்த ஆவணமும் இன்றி பாரதத்தில் நுழைய முயன்ற இத்தாலி, ரோம் நகரைச் சேர்ந்த மேட்டியோ டி ரோசா என்பவர் கைது செய்யப்பட்டார். உத்தரபிரதேசத்தின் மகாராஜ்கஞ்ச் மாவட்டத்தில் பாரத நேபாள எல்லையில் சட்டவிரோதமாக நுழைந்தபோது சீமா சுரக்ஷா பாலின் (SSB) ரோந்து குழுவினரால் இவர் கைது செய்யப்பட்டார். பின்னர் விசாரணைக்காக உள்ளூர் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் 2017 முதல் நேபாளத்தில் தங்கியிருந்தார். 2017 முதல் 2021 வரை எட்டு முறை இத்தாலியில் இருந்து நேபாளத்திற்குச் சென்றுள்ளார். பாரதம் வர அவருக்கு விசா கிடைக்காததால், எல்லையை சட்டவிரோதமாக கடக்க முயன்றார் என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.



விஜயபாரதம்

# ஆப்கன் பெண்களின் துணிச்சல்

ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியுள்ள தலிபான்களால் அங்குள்ள, பெண்கள் நிலை குறித்த அச்சம் உலக அளவில் எழுந்துள்ளது. ஆனால், இழப்பதற்கு இனி ஒன்றும் இல்லை என்ற நிலையில், தலிபான்களை தைரியமாக எதிர்த்தும், சம உரிமை கோரியும் பெண்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். ஆப்கனில் தலிபான்கள் அமைத்துள்ள புதிய அரசியலில் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு, அதிகாரம் வேண்டும் எனக் கோரி காபூலில் போராடிய பெண்கள் மீது, தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். அப்போது ஒரு பெண் தலிபான் பயங்கரவாதியின் துப்பாக்கியை நேருக்கு நேர் எதிர்த்து நின்றார். இந்த காட்சியை ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

# சந்தேக நபர்களை விடுவித்த பாகிஸ்தான்



விஜயபாரதம்

பாகிஸ்தானின் சுதந்திரதினமான ஆகஸ்ட் 14 அன்று, லாகூரில் உள்ள மினார் இ பாகிஸ்தானில் படம் எடுக்க வந்த பிரபலமான ஒரு யூடியூபர் பெண்ணை 400க்கும் அதிகமானோர் சேர்ந்து பாலியல் வன்கொடுமை செய்தனர். சமூக ஊடகங்களில் இந்த வீடியோ பரவியது. உலக அளவில் இதற்கு பலத்த கண்டனம் எழுந்தது. இதனையடுத்து 161 பேரை பாகிஸ்தான் காவல்துறை கைது செய்தது. தற்போது, அதில் பலரை அந்த பெண்ணும் அவரின் நண்பர்களும் சரியாக அடையாளம் காட்டவில்லை என கூறி 155 சந்தேக நபர்களை பாகிஸ்தான் காவல்துறை விடுதலை செய்துள்ளது. அடையாளம் காணப்பட்டதாகக் கூறி வெறும் 6 நபர்கள் மீது மட்டுமே வழக்குப் பதிவு செய்து. அவர்கள் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சில நபர்கள், அந்த பெண்தான் தன்னை அப்படி வீடியோ எடுக்க மினார் இ பாகிஸ்தானுக்கு அழைத்ததாக நீதிமன்றத்தில் கூறியுள்ளனர்.

# இங்கிலாந்தில் ஹிந்து கோயில் சேதம்

இங்கிலாந்தில் ஸ்விண்டன் நகரில் உள்ள முக்கிய இடங்களில் ஒன்றான ஹிந்து கோயிலில் சில மர்ம நபர்கள் நுழைந்து அங்குள்ள சுவாமி சிலைகளை சேதப்படுத்தியுள்ளனர். ஆயிரக்கணக்கான பௌண்டுகள் பணத்தையும் கொள்ளையடித்து சென்றனர். இப்பகுதியில் உள்ள ஒரே ஹிந்து கோயில் இதுதான். மேலும் கொரோனா பொதுமுடக்கம் காரணமாக இக்கோயில் கடந்த 18 மாதங்களில் மூடப்பட்டிருந்தது. விழாக்காலம் துவங்குவதால் இங்குள்ள ஹிந்து சமூகம் ஆர்வமுடன் தங்களது இயல்பான இறை வழிபாட்டு நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கு ஆவலுடன் இருந்த இந்நேரத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இது அங்கு வாழும் ஹிந்துக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.. இக்கோயில் இப்படி மர்ம நபர்களால் தாக்கப்படுவது இது ஐந்தாவது முறை.

விஜயபாரதம்





# கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர். 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். மிகச் சிறந்த சமூக, வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக இலக்கிய விருதுகள் பல பெற்றுள்ளார். இவர் எழுதிய பொன்னியின் செல்வன் புதினம் மிகப் புகழ் பெற்றதாகும்.



விஜயபாரதம்

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள ''புத்தமங்கலம்'' என்ற மிகசிறிய கிராமத்தில் 9.9.1899 அன்று கிருஷ்ணமூர்த்தி பிறந்தார். கிருஷ்ணமூர்த்தி மிகவும் உயரம் குறைவாக இருப்பார். இதனால் அவரை ''அகத்தியர்'' என்று அழைத்தனர். அதுவும் பின்னாளில் இவரது புனைப்பெயரில் ஒன்றாக விளங்கியது.

1921ம் ஆண்டு 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோதே பள்ளிப் படிப்பை விட்டு மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். இதனால் ஓர் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாசம் அவருக்கு இரு மாபெரும் அறிஞர்களின் நட்பை அளித்தது. ஒருவர் "ராஜாஜி'' என அனைவராலும் அழைக்கப்பட்ட ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், மற்றொருவர் டி.சதாசிவம்.

1922ல் விடுதலை ஆனார். தமிழ் அறிஞர் "திரு. வி.க'வின் ''நவசக்தி'' என்ற பத்திரிகையில் 1923ல் உதவி ஆசிரியராக சேர்ந்தார். ''சாரதையின் தந்திரம்'' என்ற இவரது முதல் நூல் 1927ல் வெளியானது. பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை! என்று ராஜாஜி அந்நூலுக்கு தாம் எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆங்கிலேயர்களை எதிர்த்தும் பலமுறை எழுதினார் இவர். அதற்காக 1931ல் ஆறு மாதங்களுக்கு சிறையில் அடைக்கப்பட்டார். 1932ல் ஆனந்த விகடனில் சேர்ந்தார். தமது நகைச்சுவை நிரம்பிய எழுத்துக்களால் அரசியல், இலக்கியம், இசை என பல பிரிவுகளில் எழுதினார்.

கிருஷ்ணமூர்த்தி மீண்டும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கு கொண்டார். மீண்டும் கைதானார். விடுதலைக்கு பின்னர், தமது நண்பரும் பிரபல கர்நாடக இசைப் பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமியின் கணவருமான சதாசிவத்துடன் இணைந்து கல்கி பத்திரிகையை துவக்கினார்.

1942ல் இவர் எழுதிய அலை ஓசை என்ற சமூக புதினம் கல்கியில் தொடராக வெளிவந்தது. 1953ல் அது தனி நூலாக வெளியிடப்பட்டது. இந்நூல் இவருக்கு ''சாகித்ய அகாடமி விருதைப் பெற்றுத் தந்தது. இவரது மறைவுக்குப் பின்னர் 1966ம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது. இம்மாமேதை 5.12.1954 அன்று காலமானார்.